DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சங்கர்** | Caste | : | |
| Father Name | : | **ரெங்கசாமி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **30.01.2026.**

**PW - 19**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

**நான் திருச்சி மாவட்டம், துறையூர் தாலுக்கா, எரகுடி, உப்பிலியர் தெருவில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். என்னை ஊரில் கடைக்காரர் சங்கர் என்று அழைப்பார்கள். இந்த வழக்கில் இறந்துபோன கார்த்திக் எனது உறவினர்தான். அவரது தந்தை சுப்ரமணி எனக்கு அண்ணன் மகன் வேண்டும். சுப்ரமணியனுக்கு பெரிய மகன் உள்ளார். அவர் பெயர் ஞாபகமில்லை. சுமார் 6 அல்லது 7 ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் ஊரில் புலியடியான் கோவில் கும்பாபிஷேகம் நடந்தது. அதற்கு ஊர்க்காரர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். ஆஜர் 1 முதல் 6 எதிரிகளை தெரியும். எங்கள் ஊர்தான். கும்பாபிஷேகத்தன்று**

ஊரில் ஏதோ தகராறு நடந்ததாக சொன்னார்கள். கும்பாபிஷேகத்தன்று நான் ஊரில் இருந்தேன். மறுநாள் ஊருக்கு சென்றுவிட்டேன். கார்த்திக் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. எங்கள் ஊரை சேர்ந்த எம்ஜி பாலசுப்ரமணியன் என்னை கூட்டி வருவதாக சொல்லி இரண்டு பசங்க என்னை அழைத்தார்கள். அதனால் அங்கு போனேன். நான் எம்ஜி பாலசுப்ரமணியன் வீட்டிற்கு போனேன், அவர் அங்கு இருந்தார். அவரது பெரிய மகன் சரவணன் அங்கிருந்தார். பாலாஜி என்பவரும் அங்கிருந்தார். மட்டைக்காரர் பேரன் இருந்தார். எம்ஜி என்னிடம் தன் மாமா மீது சுப்ரமணியன் மகன் காரைவிட்டு ஏற்றிவிட்டதாகவும், அவரது பெற்றோரை வரச்சொல்லுங்கள் என்று சொன்னார். சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் அங்கு வந்தார்கள். அவர்களிடம் என் மாமா அடிபட்டு விட்டார் மருத்துவமனை செலவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று எம்ஜி சொன்னார். அதற்கு சுப்ரமணியன் தாங்களே செலவை பார்த்துக்கொள்வதாக சொன்னார்கள். எம்ஜி பணத்தை எங்களிடம் கொடு, செலவை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொன்னார். அதற்கு அவரது மகன் ரூ.5000/– கொண்டு வந்தார். அதனை அவர்கள் வாங்கவில்லை. பிறகு ரூ.12,000/– கொடுத்தார்கள். கூட்டிவந்த பையன் ரூ.2000/– போட்டு ரூ.14,000/–த்தை எம்ஜி பாலசுப்ரமணியனிடம் கொடுத்தார்கள். அதன்பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. கார்த்திக் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் போய் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>1 , 3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

பேச்சுவார்த்தை நடந்தது மற்றும் பணம் கொடுத்ததாக சொல்லும் நிகழ்வு நடந்தது ஆகியவை எம்ஜி.பாலசுப்ரமணியன் வீட்டில் வைத்துதான் நடந்தது. சுப்ரமணியன் தன் மகன் வண்டி ஓட்டி மோதியதற்கு போலிசில் புகார்

கொடுக்க வேண்டாமென்றும், மருத்துவ செலவிற்கு பணம் கொடுப்பதாகவும் சொன்னாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை.

**2 ஆம் எதிரி தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.